**Copy of Deposition**

**சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்**

**அசல் வழக்கு எண். 11/2024**

2025ம் ஆண்டு **ஏப்ரல் மாதம் 01-ம் தேதி** பிரதிவாதி தரப்பு சாட்சி **பி.வா.சா.2-ன்** வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வேலுச்சாமி | ஜாதி | : | |
| த/பெ.பெயர் | : | | மதம் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | தொழில் | : | |
| மாவட்டம் | : | | வயது | : | |

**முதல் விசாரணை**:-

நான் சாட்சி சம்மனின் பேரில் ஆஜராகி உள்ளேன். நான் இந்த வழக்கின் பிரதிவாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் இந்த வழக்கில் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்று, எதிர் வழக்குரையில் கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

05.07.2002ம் தேதியிட்ட பி.வா.த.சா.4 உயில் சாசனத்தில் மாரப்ப கவுண்டர் அவரது

## Copy of Deposition

பேரன் சண்முகம் என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட உயில் சாசணம் எழுதி வைத்தார். அந்த உயில் சாசணத்தில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். உயில் சாசணத்தில் சாட்சிகள் என்ற இடத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது ஆகும். முதல் சாட்சி கையெழுத்தை கருப்பையன் என்பவர் போட்டார். அந்த உயில் சாசணமானது கொடுமுடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. உயில் சாசணம் பதிவு செய்தபோது இன்னார் என்று நிரூபித்தவர்கள் என்ற இடத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது ஆகும். அதே தேதியில் பி.த.சா.ஆ.5 உயில் சாசணமானது மாரப்ப கவுண்டர் மனைவி மலையம்மாள் என்பவர் அவரது பேரன் சண்முகம் என்பவருக்கு ஒரு உயில் சாசணம் எழுதிக்கொடுத்தார், அந்த உயில் சாசணத்தில் கையெழுத்து செய்தேன், மேற்படி உயில் சாசணத்தில் சாட்சிகள் என்ற இடத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது ஆகும். மேற்படி உயில் சாசணமானது கொடுமுடி சார்பதிவகத்தில் பதிவு செய்தபோது இன்னார் என்று நிரூபித்தவர்கள் என்ற இடத்தில் 2வதாக கையெழுத்து செய்தேன். உயில் சாசணத்தில் என்னுடன் முருகேசன் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டிருக்கலாம்.

கடந்த 09.07.2004ம் தேதியில் மாரப்ப கவுண்டர் மகன் சாமியப்பன் என்பவர் அவரது மகன் சண்முகம் என்பவருக்கு ஒரு உயில் சாசணம் எழுதி வைத்தார். அந்த உயில் சாசணத்தில் நானும், விஸ்வநாதன் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம். உயில் சாசணத்தில் சாட்சிகள் என்ற இடத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது ஆகும். 24.06.2011ம் தேதியில் மாரப்ப கவுண்டரின் மனைவி மலையம்மாள் என்பவர் சண்முகம் என்பவருக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார், அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் நானும், முருகேசன் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம். மேற்படி ஆவணத்தில் சாட்சிகள் என்ற இடத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது ஆகும். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் பதிவு செய்தபோது இன்னார் என்று நிரூபித்தவர்கள் என்ற இடத்தில் முதலாவது சாட்சி கையெழுத்து செய்துள்ளேன். 04.10.2011ம் தேதியில் சாமியப்பன் மகன் சண்முகம் என்பவர் அவரது மனைவி நதியா

**Copy of Deposition**

என்பவருக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்தார் , அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் நானும்,மலையப்பன் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் சாட்சிள் என்ற இடத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது ஆகும். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் பதிவு செய்தபோது இன்னார் என்று நிரூபித்தவர்கள் என்ற இடத்தில் முதலாவதாக கையெழுத்து செய்தேன்.

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்):-**

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

| |
|---|
| Taken down me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br><br>(Sd xxx M. Ramachandran)<br>Subordinate Judge,<br>Kodumudi |